بسم الله الرحمن الرحيم

**Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்துஃபா**

**12 May 2017 (15 Shabaan 1438 Hijira)**

# “Do Not Sacrifice Religion for Vain Desires”

## “வீணான விருப்பங்களுக்காக மதத்தை கைவிடாதீர்கள்”



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

எல்லாம் வல்ல அல்லாஹ், அனைத்து மக்களுக்கும் வாழ்வதற்கு தேவையான எல்லா பொருட்களையும் வழங்கியிருக்கின்றான். ஆனால் பிரச்சனை உருவாக்கிக் கொள்வது மனிதனின் அளவிற்கதிகமான ஆசையும் ஆடம்பர எண்ணமும் மூலமாகும். தம் வருமானத்திற்கும் மேலானதை அடைய வேண்டும் என்ற எண்ணமே அதற்கு காரணம். உண்மையில் சிலவற்றை தவிர்த்துக் கொள்வதன் மூலம் இவ்விஷயத்திற்கு தீர்வு கண்டு கொள்ளலாம். மிக முக்கியமான காரியங்களை தவிர்த்துக் கொள்ளாமலும் தங்களின் விருப்பங்களை கட்டுப்படுத்திக் கொள்வதும் மூலமாகவும் இவ்விஷயத்திற்கு பரிகாரம் கண்டு கொள்ளலாம். ஒரு சிறிய உதாரணம் வாயிலாக இவ்விஷயத்தை நமக்கு உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு நபருக்கு நல்ல நிலையில், மரியாதையான தரத்தில் குறைந்த செலவில் ஆடைகள் அணிந்துக் கொள்ளலாம். ஆனால் மிக விலை வாய்ந்த ஆடைகளை அணிந்துக் கொள்ளலாம் என அவர் எண்ணுகின்றார். அவரின் இந்த அளவற்ற ஆசை அவரை மிக அதிகம் செலவு செய்வதற்கு தூண்டிக்கொள்கின்றது. ஆடைகள் மீதான அந்நபரின் அதிகமான விருப்பம் காரணம் அவசிய காரியங்களாகிய உண்ணுதலையும் அருந்துதலையும் தவிர்த்துக்கொள்ள வேண்டியதாக வருகின்றது. அதன் காரணத்தால் அவர் தம் பட்ஜெட்டில் சில மாற்றங்கள் செய்கின்றார். அதாவது மிக அவசியமான விஷயங்களை அவர் செய்யாமலிருக்கின்றார். நாம் இவ்வாறு நடந்துக்கொண்டால் குறிப்பாக ஒரு குழந்தையின் விஷயத்தில்! அதாவது ஒரு குழந்தையின் உடலளவிலும் மனதளவிலுமான வளர்ச்சிக்கு மிக குணமேன்மையான உணவு பொருட்கள் அவசியமாகயிருக்க, அதை வழங்கிக் கொள்ளாமலிருப்பது மிக பெரிய குற்றமாகும். அது நம் குழந்தையிடம் செய்யும் பாவமாகும். நல்ல ஈர்ப்புடைய, விலை வாய்ந்த ஆடைகள் வாங்கிட நம்மை சார்ந்த எத்தனைபேர்கள் பணம் கடன் பெற்றுக்கொண்டீர்கள்? அதற்கு பிறகு இவ்வகை ஆட்கள் பணத்தை திரும்ப வழங்கி கொள்ள முடியாமல் கவலைபடுகின்றனர். இத்தகை செலவு செய்தலை **“இஸ்றாப்”** **(Israaf)** என கூறப்படுகின்றது. அதாவது அளவிற்கதிகமாக செலவு செய்தல்.

இத்தகை செலவு செய்தலின் தீங்குக்கு குழந்தைகளே ஆளாகிக் கொள்கின்றனர். காரணம் வீட்டில் நிகழும் பணதட்டுப்பாடுகள் மட்டுமின்றி இதன் காரணமாக கணவன்-மனைவி ஒன்றுக்கொன்றான சண்டைகள், இதன் விளைவும் குழந்தைகள் மீது வந்தடைகின்றது. இவ்வாறு குடும்பத்தில் கலகம் உருவாகின்றன. அது திருமண வாழ்க்கைக்கும் பாதிப்பை ஏற்ப்படுத்துகின்றது. இவையாவும் நிகழ்ந்தது அளவிற்கதிகமான செல்வம் செலவு செய்தல் காரணமாகும். நமக்கு அவசியமானதை தவிற்த்துக் கொண்டு அவசியமற்ற விஷயங்களின் பின்னால் பாய்ந்துக் கொள்கின்றோம். வேறொரு வார்த்தையால் கூறிக்கொண்டால் **அளவிற்கதிகம் செலவிடுதல் ஹறாமாகும்**.

தீன் (மதம் அதாவது இஸ்லாம்) நம்மை கற்பிப்பது, வாழ்க்கை பயணத்தில் மிதத்துவத்தை கையாண்டுக்கொள்வதற்காகும். இவ்வாறு இபாதத்திலும் தொழுகையிலும் செயல்படவேண்டும். நம் இபாதத்துகளை நிறைவு படுத்திக் கொள்வதற்கு நாம் நேரம் கண்டு கொள்ளவேண்டும். ஆனால் அவ்விஷயத்தில் நாம் மிதத்துவமற்ற நிலையில் செயல்பட கூடாது. நம் கடமைகளை மறந்து செயல்படாமலிருக்க வேண்டும். அதாவது மிக முக்கியத்துவமானதும் தவிர்த்துக் கொள்ளயியலாததுமான இபாதத்துகளை இழக்காமலிருங்கள்.

**ஹஸ்ரத் கலீ்.பத்துல்லாஹ் (அலை)** அவர்கள் அதற்கு பிறகு **“ஷஆபான்” (Shabaan)** 15-ம் தேதி இரவின் உதாரணத்தை எடுத்துரைத்தார். உலகின் பல்வேறு பகுதிகளை சார்ந்த ஒரு கூட்டம் முஸ்லீம்கள் இந்த இரவில் “இபாதத்” கொண்டாடுகின்றனர். அல்லாஹ் நிர்பந்தமாக்கிய அந்த ஆராதனையை (இபாதத்) அவ்வகை செயல்கள் மூலம் அவர்கள் கைவிட்டுக் கொள்கின்றனர். **ஹஸ்ரத் கலீ்.பத்துல்லாஹ் (அலை)** அதை தொடர்ந்து இதைக் கூட கூறிக்கொண்டார். “ஷஆபானின் இரவிவை முஸ்லீம்கள் தவறான நிலையின் புரிந்திருக்கின்றனர். அந்த இரவில் அனைத்து விஷயங்களுக்கும் அல்லாஹ் விதி கூறுகின்றான் என்று தவறாக புரிந்துக் கொண்டதன் மூலம்! உதாரணமாக திருமண சம்பந்தமான விஷயங்களில் தீர்மானங்கள், பிறப்பைக் குறித்த காரியங்களில் தீர்மானம் போன்றவைகள். இந்த ஒரு இரவில் அல்லாஹ் அனைத்து தீர்மானங்களும் எடுப்பதைப் போன்றும், வருகின்ற ஷஆபான் 15-ம் தேதி வரையில் அல்லாஹ் எதுவும் செய்யாமல் ஓய்வெடுத்துக் கொள்கின்றான் என்றும் தவறாக நம்பிக்கைக் கொள்கின்றனர். விஷயங்கள் இவ்வாறுயென்றால் ஒருவருக்கு சுயம் தம் ஜனாசா தொழுகையை வேண்டுமென்றால் தொழுதுக் கொள்ளலாமல்லவா? காரணம் ஷாபான் 15-ம் தேதி அன்று அனைத்து விஷயங்களுக்கு தீர்மானம் வந்து விட்டதே? ஆகவே இவ்விஷயங்களை முஸ்லீம்கள் தவறாக புரிந்திருக்கின்றார்கள்.

இபாதத்தில் இவ்விஷயம் தடைசெய்யப்பட்டிருந்தால் மற்று விஷயங்களில் இது எவ்வளவு கௌரவம் வாய்ந்ததாகயிருக்கும் என்ற ஒரு கருத்து இது வாயிலாக நமக்கு கிடைக்கின்றது. சம்பாதித்துக் கொள்வதற்கு நேர்மையற்றதும் வெறுப்புடையதுமான வழியில் சென்று, பின்னர் அப்பணத்தை **“இஸ்ராப்” (Israf)** செய்வது எவ்வளவு பெரிய குற்றமாகயிருக்கும். மனிதன் தம் அந்தஸ்தையே அழித்துக் கொள்ளும் நிலையில் அவர் மிக மோசமான அனைத்து வழிகளையும் தேடிக் கொள்கின்றனர். பணம், பணம், பணம் இது மட்டுமாகயிருக்கும் அவரின் சிந்தனை. அதன் காரணம் திருட்டின் பால் நுழைகின்றான். அவர் மக்களை வஞ்சித்துக் கொள்கின்றார். அவர் ஒரு நேர்மையில்லாத மனிதனாக மாறிக் கொள்கின்றார். **“இஸ்றாபு” (Israf)** வழியாகத்தான் அவர் சட்டத்திற்குட்பட்ட விஷயங்களுக்காகும் செலவு செய்வது. ஆனால் அது தவிர்த்துக் கொள்ள இயலாத விஷயமாகயிருக்காது.

விலக்கப்பட்ட விஷயங்களுக்காக ஒருவர் பணம் செலவு செய்தால், அதற்கு கூறுவது **தப்ஸீர் (Tabzeer)** என்றாகும். இது **இஸ்றாப்பை(Israf)** விட கௌரவம் வாய்ந்த விஷயமாகும். ஒரு முஸ்லீமின் வாழ்க்கையில் தப்ஸீருக்கு எந்த இடமும் இருக்கக்கூடாது.

நாம் மிக அதிகம் உழைத்து உருவாக்கி கொண்ட செல்வங்களை **"ஹலாலான"** விஷயங்களுக்கு செலவு செய்யாமல் **"ஹறாமான"** விஷயங்களுக்காக செலவு செய்வது மிக கவலைக்குரிய விஷயம் தான். உதாரணமாக கூறினால் நாம் அதிகமாக உழைத்து, பாடுபட்டு பணம் சேர்த்துக் கொள்கின்றோம். அது அனுமதிக்கப்பட்ட விஷயம் தான். ஆனால் அந்த பணத்தை பந்தயம் வைத்தலுக்கும், விளையாட்டிற்க்கும் மற்றும் உல்லாசிப்பிற்காகவும் செலவு செய்துக் கொள்வது மிக பெரிய இழப்பேயாகும். நாம் நமது விலைவாய்ந்த நேரம், ஆற்றல், செல்வம் இவையை ஹறாமான விஷயங்களுக்காக செலவிடுகின்றோம். அவசியமானதும் முற்றிலும் கடமையானதும் ஆன விஷயங்களை செய்யாமல் இருக்கவும் செய்கின்றோம். இது கண்டிப்பாகவும் தோல்விக்கு மேல் தோல்வியே ஆகும். மற்றொரு தரத்தில் கூறிக்கொண்டால் **ஹறாமுக்கு மேல் ஹறாம்**. அது வாயிலாக **(இஸ்ராப், தப்ஸீர்)** நம்முடைய வாழ்க்கையை அழிந்துக் கொள்கின்றது. நம் செல்வம் மட்டுமல்ல அழிந்துக் கொள்கின்றது என்பதையும் நாம் உணரவேண்டும்.

மற்றொரு விஷயம் கூட இருக்கின்றது. அதாவது **தக்கீர் (Taqteer)** அதாவது செலவு செய்ய வேண்டிய இடத்தில் செலவு செய்யாமலிருத்தல் என்பதாகும் தக்கீர். உதாரணமாக ஒருவர் பௌதீக விஷயத்திற்கு எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் செலவு செய்ய ஆயத்தமாகின்றார். ஆனால் இறைவழியில் செலவு செய்ய கூறும் பொழுது (உதாரணம் - சக்காத்து வழங்குதல், சந்தா அல்லது அல்அஸீம் தப்சீறுல் குர்ஆன் பண்டு) அவர் வழங்குவது 100 ரூபாய் அல்லது 200 ரூபாய். பிறகு அவர் எண்ணுவதோ அல்லாஹ்வின் வழியில் அவர் மிக அதிகம் செலவு செய்கின்றார் என்று. ஆனால் அவர் மதுவுக்காகவோ விருந்திற்க்காகவோ குடும்ப விஷயங்களுக்காகவோ பெரிய பெரிய ஹோட்டல்களில் அதாவது திருமண கொண்டாட்டத்திற்காகவும் மற்றும் மிக அதிகமான அளவிற்கு பணம் செலவு செய்கின்றார்கள். அது வெகுநாட்கள் தொடர்கின்றது. பல்வகையான உணவு பொருட்களின் காட்சியரங்காகயிருக்கும். ஏராளமான ஆட்களுக்கு அவ்வகை திருமண நிகழ்ச்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. அது திருமண நாளிலும் அதை தொடர்ந்து மற்று நிகழ்ச்சி நாளிலுமாக மதிய உணவுகள், இரவு உணவுகள் மேலும் மேலும் அவ்வாறு தொடர்கின்றது. இவ்வகை விஷயங்களுக்கு அதிகமளவிற்கு பணம் செலவு செய்ய தேவையில்லை என்பதை நாம் அனைவரும் உணர்ந்துக் கொள்ள வேண்டும். எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் விஷயங்களாகும். இத்தகை விருந்துகளுக்காக பணம் கடன் பெற்று கடனாளியாக மாறிய குடும்பங்களை குறித்து. அவர்களின்

பிள்ளைகளில் திருமண கொண்டாட்டத்திற்காக கடன் வாங்கி கடனாளியாக மாறிக் கொண்டார்கள். இக்கடன் கடந்த 10 வருடங்களாக அடைத்து கொண்டிருப்பவர்களையும் எனக்கு தெரியும். அவ்வகையில் நடைபெற்ற திருமணங்கள் வெற்றியடையாமல் சில மாதங்களுக்குப் பிறகு விவாகரத்தை சென்றடைந்ததுமுண்டு. அதாவது சில வருடங்களுக்கு பிறகு திருமணபந்தம் குலைந்தும், அத்திருமணத்திற்காக பெற்றோர்கள் கடன் பெற்ற பணத்தை இப்பொழுதும் வழங்கிக் கொண்டேயிருக்கின்றனர்.

**ஹஸ்ரத் கலீஃ.பத்துல்லாஹ்(அலை)** அவர்கள் அதை தொடர்ந்து எளிய திருமணங்களின் அழகைக் குறிப்பிட்டார். அத்திருமணங்கள் அல்லாஹ்வின் அருட்களால் குவிந்திருக்கும். அல்லாஹ் எளிமையை விரும்புகின்றான். சிலவேளைகளில் அது ஜுமாவுக்கு பிறகு நடைபெறும் ஒரு எளிமையான **"நிக்காகு"** சடங்காகயிருக்கும். அதை போன்ற எளிமையான திருமணமுறைகள் முற்றிலும் போதுமானதாகும்.

அதிகமளவிற்கு பணம் செலவு செய்து வெகு வாரங்கள் கொண்டாட்டத்துடன் நடைபெறும் திருமணங்களைக் குறித்து பார்வையிட்டால் பெரும்பாலான திருமணங்களும் பிறகு மோசமான நிலையை எட்டி, விவாகரத்தின்பால் சென்றடைந்ததாகவும் காணலாம். அத்தகை திருமணங்களுக்கு இறை திருப்தியை ஈர்த்துக் கொள்வதற்கு முடியாமலிருக்கின்றது என்பதும் ஒருகாரணமாகும்.

அதிக செலவில் நடத்தப்படும் திருமணமும் அதாவது பிரகடன நோக்கத்துடன் நிகழும் திருமண சடங்கும் இறையருட்களிலில் நின்று விலகிநிற்கின்றது. அல்லாஹ்வின் வழியில் தீன் விஷயங்களுக்கு பணம் செலவு செய்வதற்கு சமயம் வந்தடையும் போது இவ்வகை ஆட்கள் அதை ஒரு பாரம் வாய்ந்ததாக எண்ணுகின்றனர். அவ்வழியில் அவர்கள் பணம் செலவு செய்வதில்லை. நீங்கள் இறை வழியில் செலவு செய்யாமலிருந்தால் அதில் (அச்செல்வத்தில்) எந்த அருட்களுமில்லை. உங்களின் பணம் இழந்துவிடுகின்றது. அளவிற்கதிகமும் ஆடம்பரத்திற்காகவும் செலவு செய்ததுயாவும் பாழாகி போகின்றது. ஆகவே மனிதர்களில் கூடிகொள்ளும் இந்த பலவீனம் மிக அதிகம் தீங்குகளை விளைவிப்பதாகும். ஆடம்பரத்திற்கான ஆவேசம் உருவாகி கொள்வதற்கு காரணம் இறைவன் மீது நம்பிக்கையின்மை ஆகும். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது யாவும் பல் மடங்குகளாக அல்லாஹ் திரும்ப வழங்கி கொள்கின்றான். அதுவாயிலாக நம் செல்வங்களிலும் நம் மனைகளிலும் அருட்கள் இறங்கி கொள்கின்றது. இதை நாம் நன்கு உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

நமக்கு செலவு செய்வதற்கு உரிமையிருக்கின்றது என்றாலும் ஊதாரியாகயிருப்பது தவறான செயலாகும். நமக்கு செலவு செய்வதற்கு தடை ஏற்ப்படுத்தியிருக்கும் விஷயங்களில் செலவு செய்வதற்கு தயக்கம்

இல்லாமலிருப்பதும் தீமையாகும். நாம் ஆசையை அடைவதற்கான இவ்வகை செலவு செய்தலை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாமலிருந்தால் நமக்கு எதுவும் செலவு செய்வதற்கு இல்லாத ஒரு சூழ்நிலையை நாம் அடைந்து விடுவோம்.

ஒருவருக்கு தாகம் வந்துகொண்டது என எண்ணுவோம். அவரின் தாகம் தணிப்பதற்கு எதாவது கிடைத்திடவேண்டும். ஆனால் தாகத்தை தணிப்பதற்கு அவர் எதுவும் செலவிடுவதில்லை. அதே நேரம் அவருக்கு குளிர்பானங்கள் வாங்கி அருந்தி தம் தாகத்தை தணித்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு பணம் செலவு செய்ய வேண்டியதாகயிருக்கும். இலவசமாக கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு தாகத்தை அகற்றும் நபர்களின் விஷயம் இவ்வாறேயாகும். இந்நிலையில் நாம் இரண்டு விஷயங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் ஒன்றும் செலவு செய்யாமல் அவருக்கு தம் தாகத்தை அகற்றிக் கொள்ள முடிகின்றது. ஆனால் திடீரென உருவாகும் நபரின் ஆசையின் விளைவாக அதாவது தண்ணீருக்கு பதிலாக வேறு பொருட்கள் மூலமாக தாகத்தை அகற்றிக்கொள்ள முடியும். ஆனால் அதற்கு பணம் செலவு செய்ய வேண்டும். இதிலிருந்து நமக்கு உணரமுடிகின்ற விஷயம், நாம் நினைத்தால் சரளமான நிலையில் நம் ஆசைகளை அடைய முடியும் என்றாகும்.

ஆகவே தம் ஆசைகளுக்கு தடங்கல் ஏற்ப்படுத்திவிட்டால் அல்லாது அவையை கட்டுப்படுத்திக் கொண்டால், தம் கையிலிருப்பதை கொண்டு எளிதில் செய்ய முடியும் வழியை பின்பற்றிக் கொண்டால் ஒருவருக்கு சுக-திருப்தியுடன் வாழ்ந்துக்கொள்ள முடிந்துவிடும். சிக்கல் உருவாகிக்கொள்வது அவர் தம் ஆசைகளுக்கு அடிமையாகி விடும்போதாகும். அந்நேரம் அவருக்கு அதை அடைவதற்காக பணம் தேவையாக வரும். அதற்காக மிக அதிகம் உழைக்க வேண்டியதாகயிருக்கும். அதை அடைவதற்கு சீரானவழி கிடைக்கவில்லையென்றால் அவர் தீய வழியின் பால் செல்கின்றார். அந்நேரம் அவர் பொய்கூறிக் கொள்ள ஆயத்தமாகின்றார். மக்களிடம் நேர்மையற்ற நிலையில் பருமாறிக்கொள்ள ஆரம்பிக்கின்றார். அல்லது தடைசெய்யப்பட்டிருக்கும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுக் கொள்கின்றார்.

அத்தகை ஏற்ப்பாடுகள் இஸ்லாமிக நல்லொழுக்கமுறைகளுக்கு உகந்ததாகயிருப்பதில்லை. இது மிக கௌரவம் வாய்ந்த விஷயமாகும். அவருக்கு அனுமதிக்கப்பட்ட விஷயங்களை அடைவதற்கு சட்டத்திற்குமாறான வழியின் பால் பயணம்! அவரது ஆசைகள் ஆட்சேபத்திற்குரியதும் சட்டத்திற்கு எதிரானதும் தீயதுமாகயிருந்தால் பிரச்சனை அதிலும் மிக மோசமாக பரிணமிக்கின்றது.

ஒரு முஸ்லீம் தமக்கு இருப்பதில் திருப்தியுடையவனாக இருக்க வேண்டும். அவரது அவசியங்களை அடைவதற்கான உரிமையும் அவருக்குண்டு. அவரது விருப்பங்களை திருப்தியடையவைப்பதற்கான உரிமையும்

அவருக்குண்டு. இவையாவும் அவரது பொருளாதார எல்கைக்குள் நிற்கவேண்டும். ஆனால் அவரின் தீனுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த செயல்களும் செய்யாமலிருக்க வேண்டும். இருப்பதைவைத்து திருப்தியடைய இஸ்லாமிக சட்டம் கூறிக்கொள்வது அக்காரணத்தாலாகும். திர்மிதி ரிப்போர்ட் செய்யபட்ட ஒரு நபிமொழியில் காணலாம். **"உங்களில் ஒருவர் விடியர்காலையில் மனதளவில் நலனாகயிருந்தால், உடலளவில் ஆரோக்கியமுடையவராகயிருந்தால் அன்றைய உணவுக்கான பொருட்கள் இருந்தால், அவர் இந்த உலகை முழுவதும் கீழ்படியச் செய்தவரை போலாவார்"**

இதிலிருந்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது ஒருவர் மனதளவிலும் உடலளவிலும் நலனாகயிருந்தால், அவருக்கு புசிப்பதற்காக உணவுவகைகளும் இருந்தால், இந்த விரிவான உலகில் அவருக்கு தேவையானதனைத்தும் கிடைத்துவிட்டது என சுருக்கம். **எல்லா நேரங்களிலும் அல்லாஹ்விடம் மன்றாடிக் கொள்வதற்கான ஒரு "துவா" வோடு நான் இந்த பேருரையை நிறைவுபடுத்துகின்றேன். இந்த "துவா" இருந்தால் ஒருவர் எப்போதும் திருப்தியுடையவராக இருப்பார். "யா அல்லாஹ் நீ எனக்கு வழங்கி கொண்டதில் திருப்தியுடையவனாகயிருக்க எனக்கு உதவிபுரிவாயாக"** ஆமீன் சும்ம ஆமீன்!

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817